## தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## அலுவலக ஆணை எண். 45, நாள் 08.11.2004

பொருள்: பணியாளர் துறை - சம்பள உயர்வு வழங்குவதற்கான நடைமுறை.

----------

தேர்வாணையப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதற்கான நடைமுறைகள் குறித்து கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பணியாளர் துறை - அ, ஆ, இ, ஈ பிரிவுகள், தங்கள் பிரிவின் வரையறைக்குள் வரும் பணியாளர்களுக்கான சம்பள உயர்வு குறித்த விவரங்களைப் பதிவு செய்ய, பின் இணைப்பில் உள்ள மாதிரிப் படிவத்தின்படி 'சம்பள உயர்வுப் பதிவேடு' ஒன்றைப் பராமரிக்க வேண்டும். அப்பதிவேட்டின்படி ஒவ்வொரு ஆண்டும் சனவரி, ஏப்ரல், சூலை, அக்டோபர் மாதங்களில் பணியாளர்களின் சம்பள உயர்வுக்கு உரிய நாளில் (Due Date) அதற்கான கோப்பு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலும், அப்பதிவேட்டில் தண்டனை காரணமாக சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்பட்ட, துறைத் தேர்வு/மொழித் தேர்வு தேர்ச்சி பெறாத, பட்டப் படிப்பு முடிக்காத பணியாளர்கள் பற்றிய விவரங்களை சிவப்பு மையில் குறித்து வைக்கவேண்டும். பின்னர் அப்பணியாளர்கள் சம்பள உயர்வுக்கான தகுதி பெற்றதும் அது பற்றிய விவரங்களை சம்பள உயர்வுப் பதிவேட்டில் பதிவதுடன் உரிய நாளில் சம்பள உயர்வளிப்பதற்குரிய நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டும். இப்பதிவேடு ஒவ்வொரு ஆண்டும் சனவரி, ஏப்ரல், சூலை, அக்டோபர் மாதங்களில் முதல் வாரத்தில் சார் செயலருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வலுவலக ஆணை உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.

ந.தனம்ஜெயன், இ.ஆ.ப.
செயலாளர்

...பின்னிணைப்பு

## பின்னிணைப்பு

## பணியாளர் சம்பள உயர்வுப் பதிவேடு

| வ. எண். | பணியாளரின் பெயர் | பதவி | சம்பள உயர்வுக்குரிய நாள் | | | | சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்படின் அதற்கான காரணம் | சம்பள உயர்வுக்கான கருத்துரு சமர்ப்பிக்கப்பட வேண்டிய நாள் | அடுத்த சம்பள உயர்வுக்குரிய நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சனவரி | ஏப்ரல் | சூலை | அக்டோபர் | | | |
| (1) | (2) | (3) | (4) | | | | (5) | (6) | (7) |
| | | | | | | | | | |